[1979 அக்டோபர் 3]

அரசு மருத்துவமனைகளில் 'பென்சிலின்' உபயோகம்

வினா 58— திரு. ஆர். மணிமாறன், டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் 'பென்சிலின் மருந்து தடை செய்யப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கு இணையான மாற்று மருந்துகள் ஏதேனும் பயன்படுத்தப்படுகிறதா?

(இ) 1975-முதல் இன்றுவரை பென்சிலின் இன்சக்ஷன் போட்டதால் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஈ) குழந்தைகள், நோய்-தடுப்பு, சளி பிடித்தல், ப்ராங்கடீஸ் ஆறாத புண்கள், பால்வினை நோய் போன்ற நோய் தடுப்புக்கு பென்சிலின்தான் பயனுடையதாக உள்ளதால், அதனை மீண்டும் உபயோகப்படுத்த அரசு மறு பரிசீலனை செய்யுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) உயர் மட்ட மருத்துவ வல்லுநர் குழுவின் பரிந்துரைக்கு இணங்க அரசு மருத்துவமனைகளில்/நிலையங்களில் புறநோய் பிரிவுகளில் மட்டும் பென்சிலின் ஊசி போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளுறை நோயாளிகளுக்கு சோதனைக்குப்பின் பென்சிலின் போடப்பட்டு வருகிறது.

(ஆ) அதற்கு இணையான மாற்று மருந்துகள் சல்பனாமைடு ஆண்டிபையாடிக்கான டெட்ராசைக்கிளின் ஆகிய மருந்துகள் உசிதம்போல் கொடுக்கப்படுகின்றன.

(இ) அரசு மருத்துவமனைகளில் பென்சிலின் ஊசி போட்டதால் இறந்தவர்கள் எண்ணிக்கை மொத்தம் பதினைந்து பேர்கள் என்று மாநில மருத்துவக் கட்டுப்பாட்டு அலுவலர் தற்போது தெரிவித்துள்ளார்.

(ஈ) ஆம்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பென்சிலின் ஊசி இப்போது தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் நோயாளிகள் இன்று அவதிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே முழுமையாக இதை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஏதாவது பரிசீலனை வைத்திருக்கிறதா? இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் : (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே' பென்சிலின் ஊசி போட்டதின் காரணமாக மருத்துவமனைகளில் பலர் அகால

[1979 அக்டோபர் 31]

மரணமடைந்திருக்கிறார்கள் என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. செய்தித்தாள்களிலும் இதுபற்றிய செய்திகள் வந்து இருக்கின்றன. இதைப்பற்றி மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து விவாதித்தனர். அக்குழு அரசுக்கு சில பரிந்துரைகளை செய்தன. அதன்படி மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கு பென்சிலின் ஊசி போடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளுறை நோயாளிகளுக்கு சோதனைக்குப் பின், ஆன்டிபயாடிக் மருந்துகள் தயார் செய்து வைத்துக்கொண்டு பென்சிலின் ஊசி போடவேண்டும். புற நோயாளிகளுக்கு இதற்கு இணையான ஆன்டிபயாடிக்கான டெட்ராசைக்கிளின் ஆகிய மருந்துகள் உசிதம் போல் கொடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப் பட்டது. இதன் அடிப்படையில்தான் இப்போது பென்சிலின் ஊசி போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது மேலும் நிபுணர் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இதர மாநிலங்களில் இப்படி பென்சிலின் ஊசி போட்டுக்கொண்டதால் யாரும் இறக்கவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. இதர மாநிலங்களில் பென்சிலின் ஊசி போடுவது தடுக்கப்படவும் இல்லை. அப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும் பென்சிலின் ஊசி போடுவதை தடுத்து நிறுத்துவதற்கு என்ன காரணம்?

[முற்பகல் 9–50]

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஒரு தனிப்பட்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது எந்த முறையில் நோயாளிகள் இறப்பதற்குக் காரணம் என்பதை ஆராய்ந்து, அந்தக் குழுவின் அறிக்கை தீவிர பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, குழு அமைக்கப் பட்டு அந்தக் குழுவினுடைய ரிப்போர்டு சப்மிட் பண்ணியாகி விட்டது. அதனுடைய சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று அமைச்சு செயலர் அவர்கள் சொன்னார்கள். கவர்ன்மென்ட் சோர்சிலே 15 பேர்கள் மரணம் அடைந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த அளவிலே 15 மரணங்கள் சம்பவித்தது, அலர்ஜியிலே செத்தார்களா அல்லது அந்த மருந்திலே வேறு ஏதாவது மிக்ஸ் ஆகி கெட்டுப் போயிற்றா, என்ன காரணங்கள் என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்களா? அதைச் சொல்லுங்கள்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய காரணங்களைத் தான் அந்தக் குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் கேட்க வேண்டிய கேள்வியை திரு. உமாநாத் அவர்கள் கேட்டு விட்டார்கள். அடுத்த கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இறந்த அந்த 15 குடும்பங்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்கப் பட்டதா? இல்லையென்றால், இனிமேல் நிதி உதவி அளிக்கப் படுமா?

திரு, இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

கால்நடைகள் மருத்துவத்திற்கான கட்டணம்.

வினா 59—திரு. நா. பழனிவேல் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) கால்நடை மருத்துவ மனைகளில் (Key Village Centres) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் மாடுகளுக்கு அங்கே ஊசி போடக்கூடிய டாக்டர்கள் ரசீது கொடுத்து இரண்டு ரூபாய் வசூல் செய்கிறார்கள். சில இடங்களில் ரசீது கொடுக்காமல் வசூல் செய்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் அப்படி இல்லை என்று சொல்வது வியப்பாக இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு விசாரணை செய்யக்கூடிய முறையில் தனி அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட புகார்கள் என் கவனத்திற்கு வருமேயானால், நிச்சயமாக அதிகாரிகளை நியமித்து விசாரணை செய்ய ஏற்பாடு செய்கிறேன்.